மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க இலக்கியத்தில் உளவியல்

# Psychology in Sangha Literature

ஹாயத்திரி சண்முகநாதன்/ Hayathri Shanmuganathan[1]
[1] நூலகர், கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு, இலங்கை
Corresponding Email: swaraganam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியமானது பண்டைய தமிழ் நாகரிகம், மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோருக்குச் சான்றாகவும், செய்தி ஊற்றாகவும் அமைகிறது. இப்பின்புலத்திலேயே தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாட்டை மேலை நாட்டறிஞர்களின் வரவு உண்த்தியது. இருபதாம் நூற்றாண்டில் இலக்கியக் கொள்கைகள், கோட்பாடுகள் என்ற புதிய சிந்தனைகள் தோன்றின. தமிழாராய்ச்சி வளர்ச்சியில் தமிழியல் ஆய்வுகள் இருபத்தியோராம் நூற்றாண்டில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வருகிறது. அத்தகைய பரிமாணங்களில் ஒன்று தான் உளவியல். உளவியல் என்பது வாழும் உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் நமது முயற்சி. குறிப்பாகத் தம்மை தாமே அறியும் தனிப்பட்ட தேடுதல். தமது உணர்வுகள், எண்ணங்கள், செய்யும் செயல்களுடன் தொடர்புடையது உளவியல். இது நடத்தையைப் பற்றிய அறிவியல். நடத்தையின் வகைகளைப் பற்றி ஆய்வது. தன்னளவில் முரண்பாடுகள் அற்ற ஒத்திசைவும் சமூக அளவில் நல்லுறவான இணக்கமும் உளநலத்தின் இருபெரும் கூறுகள். இவற்றில் ஏதேனுமொன்றில் குறைவு ஏற்பட்டாலும் உள்ள முறிவு, உள்ளப்போராட்டம், உள்ள இறுக்கம் ஆகிய உணர்வுநிலைகள் ஏற்படுகின்றன. முழுக்க முழுக்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள நமது தொல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும். சங்க இலக்கியங்கள் குறித்த பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்ற இக்காலகட்டத்தில் சங்க இலக்கிய பாடல்களை உளவியல் நோக்கில் அணுகுதல் என்பது அவசியமானதொன்று. சங்கக் கவிதைகளை உளவியல் நோக்கில் பார்க்கும் அணுகுமுறை ஏற்கனவே தமிழில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் கூர்மையாக்கப்படவில்லை. உளவியல் என்பது இன்று ஒரு பெரும் அறிவுத்துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இத்துறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் பிரசித்தம் பெற்றது.

**கருச்சொற்கள்:** உளவியல், சங்க இலக்கியம், மனப்போராட்டம், மனமுறிவு

**Abstract**

Sangha literature is a source of information and evidence for those who want to know about the ancient Tamil civilization, language, etc. In the twentieth century, new ideas called literary principles and theories appeared. In the development of Tamil research, Tamil studies are gaining various dimensions in the twenty-first century. One such dimension is psychology. Credit psychology is our attempt to learn about the behaviour of living beings, especially the individual quest for self-knowledge. Psychology is the science of behaviour that deals with our feelings, thoughts, and actions. Self-contradiction-free harmony and social harmony are the two major components of psychological well-being; however, when there is a deficiency in any of these, emotional states such as internal conflict, and internal tension occur. Such emotional states are widespread in our old literature, the Sangam literature, which is almost exclusively self-conscious songs. At this time when various studies on Sangha literature are happening, it is necessary to approach the Sangha literary songs from a psychological point of view. Although the approach of looking at the Sangha poems from a psychological point of view has already been introduced in Tamil, it has not been developed yet. Many of the theories and ideologies presented by pioneers such as psychologists Freud Jung Lacan in relation to art literature are still lagging behind in this point of view. Psychology has grown into a major field of knowledge today. This field gained prominence only after the nineteenth century. However, psychological thoughts have been established among the Sanghatamizh, which can be known by studying the ancient texts. This study aims to investigate what kind of psychological thinking has been prevalent in the expression of feelings, social values and knowledge level through Sangha internal literature, based on descriptive method. It is also based on psychological principles.

**Keywords:** Psychology, Sangha Poem's, internal conflict, internal tension

**முன்னுரை**

சங்க இலக்கியம் தமிழில் கிடைத்த காலத்தால் முற்பட்ட இலக்கியமாகும். பழந்தமிழர் இலக்கியத்தினை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்தனர். ஒத்த தலைமகனும், தலைமகளும் உள்ளம் கலந்து ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையைக் கூறும் பாடல்கள் அகம் எனப்பட்டது. போர், கொடை, வெற்றிச் சிறப்பு முதலியவற்றைக் கூறும் பகுதிகள் புறம் எனப்பட்டது. அகம் சார்ந்த காதல் வாழ்வையும் புறம் சார்ந்த வீரவாழ்வையும் பாடிய மருதநாயகம் சங்கச் சான்றோர் பெற்றிருந்த உளவியல் அறிவு அவர் காலத்தே உலகில் வேறு எந்த இனம் பெற்றிருந்த உளவியல் அறிவினும் பெருஞ்சிறப்புடையது: பெரும் வியப்பிற்குரியது என்பதை அன்னார் தம் அகப்பாடல் மரபுகள் தெளிவாகச் சுட்டிக்காட்டும் என்று குறிப்பிடுகின்றார்.

"தமிழ் கவிதையில் அகப்புறப் பாடுகள் உளவியல் அடிப்படை கொண்டவை. அகமென்பது உள்ளத்தின் கண் நிகழ்வது. புறத்தே தோன்றாது. உணர்வு அறிவது அகத்தே பூத்து மலரும் தன்மையதாகிய காதல் உணர்வை அகம் என்றனர். தமிழ்ச்சான்றோர்கள் புறமென்பது வெளியே புலனாகும் நிலைகள் தொல்காப்பியர் கூறும் ஐந்திணை மரபும் அம்மரபின் வழிப்பட்ட சங்கச் சான்றோர் செய்யுட்களும் ஆழ்ந்த உளவியல் அடிப்படை கொண்டவை. இவற்றில் சமுதாய யதார்த்தத்தினும் உளவியல் யதார்த்தமே முன்னுரிமை பெறுகின்றது" என்னும் கூற்று சங்க இலக்கியத்தின் உளவியல் சிறப்பைப் புலப்படுத்துகின்றது.

இலக்கியத்தில் உளவியல் என்பது படைப்பாளரின் படைக்கப்பெறும் பாத்திரத்தின் உணர்வுபூர்வமான அனுபவங்களைக் கொண்டது. குறிப்பாக, மனிதனின் நனவுப்பாடு, வாழ்க்கைப்பாடு, உணர்வு அதிர்ச்சி, நெருக்கடி, கவலை, மகிழ்ச்சி, குற்றம், குடும்பம் முதலியவை உள்ளடக்கிய கவித்துவமான அனுபவங்களைக் குறிப்பதாகும். இயற்கைக்குப் புறம்பான நிகழ்வுகள் சில சமயங்களில் இதில் இடம்பெறுகின்றன. இவை முன்னோர்களின் கற்பனை அனுபவங்கள், வேறொரு உலகத்தின் காட்சிகள் என படைப்பவனின் கூட்டு நனவிலியாகச் செயல்படும் தன்மையாகிறது. சங்க இலக்கியமானது, வாழ்க்கை அடிப்படையில் எழுந்த நாடகப் பண்புடையது. முற்றிலும் உளவியல் மையமாய் உருவாக்கம் பெற்றது. புறத்திணையும், அகத்திணையும் வாழ்க்கைச் சூழல் பின்னணியால் கட்டமைக்கப்பெற்ற, மனோநிலையின் எதிரொலியெனப் பாடல்கள் வாயிலாக உணரமுடிகிறது.

சங்ககாலப் புலவர்கள் காதல், வீரம், கொடை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர். இப்பாடல்களில் இன்ப துன்ப உணர்வுகளின் வெளிப்பாடுகள் உரையாடல்களாகவோ தனக்குத்தானே கூறிக் கொள்வனவாகவோ அமைந்தாலும் மனவுணர்வுகள் வலுப்பெற்றுள்ளன. தலைவனின் பிரிவு, தலைவனைச் சந்திக்க இயலாத தனிமை, அத்தனிமைக்குக் காரணமான சுற்றம், தலைவனின் மாறுபட்ட செயற்பாடு (பரத்தையர் பிரிவு) போன்ற நிலைகளிலிருந்து விலக முடியாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதால் மனமிறுக்கம் ஏற்படுகின்றது. அந்த மன இறுக்கத்தின் வெளிப்பாடே உறக்கமின்மை, பகற்கனவு, திரிபுணர்ச்சி, மனவெழுச்சி வடிவாகவும் மனநோயாகவும் உருவெடுக்கிறது. முழுக்க முழுக்க தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமே அமைந்துள்ள நமது தொல் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இத்தகு உணர்வு நிலைகளைப் பரவலாகக் காணமுடியும்.

மனிதனின் ஆழ்மனத்தோடும், அதன் இயங்கு நிலையோடும் தொடர்புடைய ஒன்றாக உளவியல் காணப்படுகின்றது. உளவியலும் இலக்கியமும் என இன்று பல்வேறு ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றாலும் அவை பிராய்ட், யுங், லக்கான் போன்ற உளவியலாளர்கள் கலை இலக்கியம் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்தியல்களுக்கும், வரன்முறைகளுக்கும் ஏற்ப இன்னமும் முழுமை பெறவில்லை என்றே கூறலாம். மனஅலசல் கோட்பாட்டை இலக்கியம் கலை, வரலாறு,  அந்தவகையில் சங்க இலக்கியங்களை உளவியல் சார் கருத்துக்களின் அடிப்படையில் ஆராய வேண்டியது காலத்தின் தேவை எனலாம்.

**உள்ளப்போராட்டம்**

உள்ளத்தின் நோக்கமும், ஊக்கமும் மனிதனைச் செயல்படுத்துகின்றது. ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட விருப்பங்கள் உடனிகழ்வாய்த் தோன்றுவதால் எதனை ஏற்பது, எதனை விருப்பம் என்னும் குழப்பம் தோன்றுகிறது. இதன் காரணமாக முடிவெடுக்க இயலாநிலையும், செயற்பட இயலாநிலையும் தோன்றுகிறது. இத்தகைய நிலையே உள்ளப்போராட்டம் எனப்படுகின்றது. "ஒரே நேரத்தில் நிறைவுற இயலாததும் ஒன்றிற்கொன்று தனித்தனியானதுமான செயல் நோக்கமும், ஊக்கமும் உள்ளத்தில் இருப்பதனால் விளைவதே உள்ளப்போராட்டம்" என உளவியலாளர்கள் விளக்குகின்றார்கள். சங்க இலக்கியங்கியச் சான்றுகளுடன்  இதனை நாம் நோக்கலாம்.

**சான்று 01:**

"நீ உடம்படுதலின் யான்தர வந்து
குறி நின்றன்னே குன்ற நாடன்
இன்றை அளவைச் சென்றைக்க என்றி
கையும் காலும் ஓய்வன ஒடுங்கத்
தீஉறு தளிரின் நடுங்கி
யாவதும் இலையான் செய்ற்கு உரியதுவே|| (குறுந்தொகை – 383)

இப்பாடலில் உடன்போக்கிற்கு உடன்பட்ட தலைவி இறுதி நேரத்தில் தயங்கித் தவிக்கிறாள். தோழியின் முயற்சியில் உடன்போக்கிற்கான ஏற்பாடுகள் நிறைந்துவிட்டன. தலைவனும் குறித்த இடத்தில் வந்து நின்றுவிட்டான். ஆனால், தலைவி "இன்று ஒரு நாள் போகட்டும்" என்கிறாள். இதனை நாம் கூர்ந்து நோக்கினால், விரும்பத் தகுந்த இரண்டு இலக்குகளை ஒரே நேரத்தில் அடைய முயல்வதில் ஏற்படும் உள்ள நிலையே இத்தகைய உள்ளப்போராட்டம்" என உளவியலாளர்கள் வரையறை சொல்கின்றார்.

ஓர் இலக்கினை அடைவதில் நேர்நிலையான தூண்டல் ஒன்றும் எதிர்மறையான தூண்டல் ஒன்றும்செயற்படுகின்றன. அப்போது அந்த இலக்கினை அணுகுவதா, விலகுவதா என்னும் போராட்டம் தோன்றுகிறது.

**சான்று 02:**

"காதலை என்பதோ இனிதுமற்று இன்னாதே
அன்பினை என்பதோ இனிதுமற்று இன்னாதே
அருளினை என்பதே இனிது மற்று இன்னாதே
களிறு இயங்கு ஆர்இடை ஈங்கு நீ வருவதை அதனால்
இரவின் வாரல் விரவுவீ
அகல் அறை வரிக்கும் சாரல்
பகலும் பெறுவை இளவள் தடமென்தோளே" (கலித்தொகை – 49)

இரவுக்குறி நேரங்களில் தலைவியின் உள்ளம் போராட்டத்தில் தவிக்கிறது. இரவு நேரத்தில் காட்டு வழியில் இடியும், மின்னலும், மழையும் சூழ்ந்த வேளையில் தலைவன் தலைவியைக் காண வருதலால் அன்பின் ஆழம் புலப்படுகிறது. அதனால், தலைவி மகிழ்கிறாள். ஆனால், தலைவன் வரும் வழிக்கடுமையும் வழியிடை நேரலாகும் இன்னல்களும் தலைவியை அச்சுறுத்தலால் துன்புறுகிறாள். தலைவனின் வருகை இனிமையும், இன்னாமையும் விளைவிக்கின்றது.

**சான்று 03:**
“புள் ஒலிக்கு அமர்த்த கண்ணள் வெள்வேல்
திருந்து கழற் காளையொடு அருள் சுரம் கழிவோள்
எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனை இழை மகளிர்ப் பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே” (ஐங்குறுநூறு 382)

உடன்போக்கின் போது இடைவழியில் தலைவனும், தலைவியும் சிற்றூரில் ஒன்றில் தங்குகின்றனர். விருந்தாக வந்த இளையோரை விரும்பி வரவேற்றுப் பெண்டிர் மகிழ்கின்றனர். அம்மகிழ்வின் ஊடே தலைவியைப் பிரிந்து வருந்தும் தாயின் வருத்தத்தை நினைத்து வருந்துகின்றாள். விருந்தாகி வந்த புதிய உறவையும், இதனால் ஏற்கனவே பிரிந்துபோன ஒரு உறவை நினைத்து மகிழ்ச்சியும், வருத்தமும் கொள்கிறாள்.

மேற்குறிப்பிடப்பட்ட சான்று இரண்டு மற்று மூன்றினை நோக்குகையில் “விரும்பத்தகுந்த நேர்நிலையானதும் விருப்பத்திற்கு இயையாத எதிர்மறையானதுமான நிகழ்ச்சிகள் நேர்தல் வாழ்வியலாக உள்ளது. நேர்மறையும் எதிர்மறையும் விரவிய கூறுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளமையால் இப்போராட்டத்தைக் கலப்பற்ற நன்மை” என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

நனவு மனத்திற்கும், நனவிலி மனத்திற்குமானப் போராட்டங்களில் திண்ணிய திறமுடையது நிறைவு நிலையடையும். அவ்வண்ணமே சங்கக் காதலில் பகற்குறியில் தலைவியைச் சந்தித்து மணம் முடிக்க விழையும் நிகழ்வானது தலைவிக்கு மகிழ்வுக்கும் குழப்பத்திற்குமானப் போராட்டத்தை அளிக்கிறது. நப்பசலையாரின் அகநானூற்றுப் பாடலை ஆழ்ந்து நோக்குகையில் தலைவியின் மனப்போராட்டம் தெளிவுபட விளங்குகிறது.

**சான்று 04:**
“இரவந் தன்றால் திண்தேர் கரவாது
ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காண,
பகல்வந் தன்றால் பாய்பரி சிறந்தே” (அகநானூறு 160)

இரவுப்பொழுதினில் மட்டுமே தலைவியைக் காண வந்த தலைவன், ஊரார் அறியும் வண்ணம் பகல்பொழுது வந்தது சிறப்பானதாய் உள்ளது. இனி, தலைவியைக் கைப்பற்ற யாதொரு தீவினையும் நிகழாது என்று படைக்கப்பட்ட பாடல் வரிகளில் உவமையாக்கப்பட்ட ஆமையின் சூல் உரும் காலம் நோக்கத்தக்கது.

சூல் உற்ற பெண் ஆமையானது, பிற உயிரினங்கள் அறியாதவாறு, புறத்தே குழி தோண்டி முட்டையிட்டு மறைக்கும், இதுவுணர்ந்த ஆண் ஆமை அம்முட்டைகளைப்

பாதுகாக்கும் நல்நிகழ்வில், முட்டைக்குக் காதல் உறவையும், ஆண் ஆமைக்குத் தலைவனையும், பெண் ஆமைக்கு தலைவியையும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். நெடுநாளாய் தலைவன் தன்னை மணம் புரிவதில் ஐயம் கொண்ட தலைவியின் உளப்போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியானது எனலாம்.

"பெற்றோர் விதிக்கும் தடைகளும், கட்டளைகளும் ஒருவனுடைய ஒழுக்க உணர்வுகளாக உயிர் வாழ்ந்து வருகின்றன" என்கிறார் உளவியலின் தந்தை ஃபிராய்ட். சங்கமகளிரின் காதல் வெளிப்பாட்டில் இவரது கருத்து ஏற்புடையதாக அமைந்துள்ளது.

தலைவன் பொருள் தேடச் செல்கிறான். செல்லும் வழியெல்லாம் தலைவியை நினைத்துக் கொண்டே செல்கின்றான். இதனால், தலைவி மீது ஏற்படும் காம உணர்வானது வெள்ளப்பெருக்குப் போன்று பெருகின்றது. எனினும்: பொருள் தேடிச் சென்று இடையில் திரும்பமுடியாத இவ்வுலகத்து இயல்பினால் ஏற்படும் தலைவனின் உள்ளபோராட்ட நிலையை,

"…………………… நினைந்தனென் அல்லனோ பெரிதே
நினைத்து மருண்டனென் அல்லனோஇ உலகத்துப் பண்பே
…………………………………………………………..
…………………………………………………………..
அனைப் பெருங்காமம் ஈண்டு கடைக்கொளவே
(குறுந்தொகை 99)

என்று ஔவையார் திறம்பட விளக்குகின்றார்.

**ஈடுசெய்தல்**

மனம் முறிவுறுதலை மாற்றுவதற்குக் கையாளக் கூடிய மாற்றுவழிகளைப் பற்றி உளவியலாளர்கள் ஆராய்ந்துள்ளனர். ஒரு பொருளை அடைவதற்கான முயற்சியை விட்டு விடுதல், கிடைக்காத பொருளுக்குப் பதிலாகக் கிடைக்கும் பொருள் ஒன்றை அடைதல், தற்கொலை செய்து கொள்ளுதல், துன்பத்தின் மூலம் இன்பம் பெறுதல், தன்னைத் தானே தாக்குதல் ஆகிய வழிகளைக் குறிக்கிறது. இம்மாற்று வழி முறையே ஈடுசெய்தல் என்னும் இயங்கு முறைகளாகும். ஒருவரின் பிரிவால் துன்புறும் உள்ளம் அவரொடு இயைபுடைய மபொருளின் தொடர்பால் நிறைவு பெறுதலைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது.
குறுந்தொகைப் பாடல் ஒன்றில், தலைவியின் மேனி அடையாளங்களைக் கண்டு தாயார் அஞ்சி, கட்டுவிச்சியிடம் குறி கேட்கின்றாள். தோழி இதுதான் சரியான நேரம் தலைவியின் காதலை வெளிப்படுத்துவதற்கு என எண்ணுகிறாள்.

"அகவன் மகளே! அகவன் மகளே
மனவுக் கோப் அன்ன நல்நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே! அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந் - 23)

எனத் தோழி அறத்தொடு நிற்கின்றாள். அன்னையர் அகவல் மகள் முதலியோர் முன்னிலையில் தலைவியின் களவுவாழ்வை வெளிப்படையாக எடுத்துரைக்க இயலவில்லை. தலைவனைப் பாடுக எனத் தயங்காமல் சொல்ல இயலாத நிலையில் குன்றைப் பாடுக என்கின்றாள். "இன்னும் பாடுக பாட்டே அவர் நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே" எனக்

கூறுகையில் ஓர் ஊக்கத்தை வெளியிட முடியாத நிலையில் தொடர்புடைய வேறு ஒன்றை வெளியிடல் அல்லது புதிய வடிவத்தில் வெளியிடல் ஆகியன ஈடுசெய்தல் எனும் உளவியல் கோட்பாட்டில் அமைந்துள்ளது.

பிரிவுக் காலத்தில் தலைவி பகலெல்லாம் தலைவனின் குன்றம் கண்டு ஒருவாறு ஆற்றியிருந்தாள். மாலை இருட்டில் அம்மலையும் மறைகிறதே என ஆற்றாமையுடன் பேசுகிறாள்.

“கண்டிசின் வாழி தோழி தெண்திரைக்
கடலாழ் கலத்தின் தோன்றி
மாலை மறையுமவர் மணிநெடுங்குன்றே” (குறுந்தொகை 240)

இப்பாடலில், குன்றத்தின் காட்சியே தலைவனின் தோற்றத்திற்கு ஈடாகத் தலைவி மனம் நினைக்கிறது. அக்குன்றம் கடலில் முழ்கும் கப்பல் போல மாலை இருட்டில் மெல்ல மெல்ல மறைகிறது. மாற்றுக் காட்சியில் தலைவி மனம் பற்றிய ஆறுதல் மெல்ல மெல்லத் துயரக் கடலில் மூழ்குகிறது. “மணிநிற மால்வரை மறைதோறும் அணிமலர் நடுங்கண் ஆர்ந்தன பணியே” (நற் - 208) என்று தோழியின் கூற்றும் இணைத்துக் காணத்தக்கது. மாற்றுப்பொருள் நிலைக்கண்டு அதனால் இழப்பீடு செய்தல், இயலக்கூடிய ஒன்றே என்பதைப் பல கூற்றுக்கள் நிரூபிக்கின்றன. தலைவனின் குன்றம் கண்டவுடன், “குன்றம் நோக்கினென் தோழி பண்டை அற்றோ கண்டிசின்நுதலே” (குறுந் - 249) இதனால் தலைவியின் நெற்றிப் பசலை தெற்றென மறைகிறது. தலைவனின் குன்றத்தைப் பாடியவுடன், “வாடிய மென் தோளும் வீங்கின்” (கலித்தொகை – 41) என்கிறாள். இக்கூற்றுகள் ஈடுசெய்தல் என்னும் தற்காப்பு இயங்குமுறையின் கூற்றுகளோடு ஒத்தப்போகின்றன. இதனை “ஒன்றைச் சாதிக்க இயலாத சூழலில் ஏமாற்றமும் முறிவும், கவலையும் உற்ற உள்ளம் பிறிதொன்றைச் சாதிக்க முயல்கிறது. உள்ளத்தின் இவ்வியல்பை உளவியலாளர் ஈடுசெய்தல் என்கிறார். ஒரு நிலையின் இழப்பை மறுநிலையில் ஈடுசெய்து கொள்ள உள்ளம் முயலுதலால் இதனை இழப்பீடு என்பர்.

**மனக்காயம்**

தலைவி தன்னைப் பழித்தாள் என்று கேள்வியுற்ற பரத்தையக்குச் சினம் வந்தது அதனால், பரத்தையின் சுயமோகம் காயம்பட்டு விட்டது. இந்நிலையை மனக்காயம் என்று மன ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

“பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃதயர்கம் சேறுந்தானஃது
அஞ்சுவது உடையாளாயின் வெம்போர்
.............................................
கிளையொடுங் காக்கதன் கொழுநன் மார்பே” (குறுந்தொகை – 80)

இப்பாடல் தலைவி தன்னைப் பழித்துக் கூறியமைக்கு விடை கூறும் முகமாகப் பரத்தைக் கூற்றாக அமைகிறது. பரத்தைத் தலைவன் தன்னுடன் புனலாட வருவதைக்காண இயலாதவளாகத் தலைவி அஞ்சுவதாகவும், தலைவனைத் தன்னிடமிருந்து காக்க வேண்டுமாயின் வள்ளல் எழினி பகைவர்களிடமிருந்து தன் சுற்றத்தாரோடு வந்து தன் கணவனைக் காத்துக் கொள்ளட்டும் என்கிறாள்.

மனக்காயத்தின் வெளிப்பாடாகப் பரத்தை தலைவியால் தலைவனை மீட்க முடியாது என்பதன் மூலம் தலைவியின் இடத்தில் தான் இருப்பதாகத் தன் நனவிலி ஆசையை வெளிப்படுத்துகிறாள்.

தலைவி தன்னைப் பழித்தாள் என்ற செய்தியைக் கேட்டதும் பரத்தையர் உள்ளத்தில் மனக்காயம் ஏற்படுகிறது.

"பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர்! நின் மனையோள்
யாரையும் புலக்கும் எம்மை மற்று எவனோ" (ஐங்குறுநூறு – 87)

தலைவி தன்னைப் பற்றாக்குறை கூறினாள் என்ற செய்தியைக் கெட்ட பரத்தை ஒருத்தி நேரே தலைவிக்குக் கேட்குமாறு சாடையில் சொல்கிறாள். பரத்தை தலைவி மீது சினங்கொண்டு பழித்த இயல்பினை பொதுமையாக்கிக் கூறுகின்றாள். "நம்முடைய சிந்தனை பெருமளவில் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படாது. கோபம், அச்சம், வெறுப்பு ஆகிய மனவெழுச்சிகளின் செல்வாக்கினால் செயற்படுகிறது. ஒரு குழு அல்லது சமுதாயம் அல்லது இனத்தைச் சார்ந்த ஒருவரை வெறுக்கலாம். வெறுப்பின் காரணமாக அவை பழித்துரைக்கின்றோம்." இவை பொதுமையாக்கம் என்று உளவியலாளர் கூறுவதாக து.சிவராஜ் கூறுகின்றார்.

சினம் பொங்கிய பரத்தையின் சுயமோகம் காயம் பட்டுவிட்டது. இதனை மனக்காயம் என லக்கான் கூறுகின்றார். தற்காதல் எல்லா உயிர்களுக்கும் உண்டு. வந்த விருந்தினரைத் தலைவன் தானே வந்ததாகக் குறித்து, யாம் விரும்பி அயர்கம் என்கிறாள். அதாவது என்மீது (பரத்தை) எந்தக் குற்றமில்லை. தலைவன் என்னைத் தேடி வந்தான். நான் அழைக்கவில்லை. விருந்தினராக வந்த தலைவனே ஏற்று விருந்து செய்தேன் என்ற மனநிலையைப் பரத்தை பற்றிய பாடல்கள் குறிக்கின்றன.

**பின்னோக்கம்**

வாழ்வில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழும் போதும், விருப்பங்கள் முறிவற்று உள்ளப் போராட்டம் மிகும் போதும் உள்ளம் தன்னை அறியாமல் இறந்த காலத்தின் இயல்பிற்குச் சென்று விடுகிறது. இதனையே பின்னோக்கம் என்பர்.

தலைவனும், தலைவியும் உடன்போக்கை மேற்கொண்டபின் நற்றாயும், செவிலியும் தன் மகளை நினைத்து வருந்துகிறாள். தன் வருத்தத்தின் போது, தன் மகளின் வாழ்வில் முன்னர் நடந்த நிகழ்ச்சியினை எண்ணிப் பார்க்கின்றாள்.

"மணிசெய் மண்டைத் தீம்பால் ஏந்தி
ஈனாத் தாயர் மடுப்பவும் உண்ணாள்
நிழற்கயத்தன்ன நீள்நகர் வரைப்பின்
எம்முடைச் செல்வமும் உள்ளாள்" (அகநானூறு – 105)

தன்மேல் அன்பாக நடந்து கொண்ட நிகழ்வுகளைச் செவிலித்தாய் நினைத்து வருந்துகிறாள். இதனை உளவியலாளர் பின்னோக்கம் என்கிறார். "வாழ்வில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழும் போது, உள்ளம் தன்னை அறியாமல் இறந்த காலத்தின் இயல்பிற்குச் சென்றுவிடுகிறது. தொடக்க வாழ்க்கைக்குக் குறிப்பாகக் குழந்தைப் பருவத்துக்குரிய

உளவியல் சார்ந்த செயல்முறைகளாகிய பழைய நிலைக்குச் செல்கிறது எனும் கருத்துப்படி நோக்கினாள் செவிலி தன் மகளைப் பற்றி நினைத்தது தற்காலிகமான ஒரு பிரிவிற்குத் தற்செயலான துயரமாக அமைந்து விடுகிறது.

இற்செறிக்கப்பட்டுத் தனிமையில் புலம்பும் தலைவியின் உள்ளம் இறுக்கமும், நெருக்கடியும் மிக்கச் சூழலில் முன்பு களவுக் காலத்து தலைவன் இரவுக் குறிக்கண் வந்து சென்றமையை நினைக்கின்றாள்.

“நாம முதலை நடுங்குபகை அஞ்சான்
காமம் பெருமையின் ஞான்றை
அருகாது ஆகிய அண்கண் நெஞ்சம்” (நற்றிணை – 287)

இப்பாடலில் என் உள்ளம் அச்சத்தாலும், கவலையாலும் கேட்டு வருந்துகிறதே என்பது தலைவியின் எண்ணமாகும். தலைவனைச் சந்திக்க இயலாத சூழலில் சந்தித்த நேரங்களை எவ்வடிவிலேனும் நினையுறுமாறு உள்மனம் செயற்பட்டு ஒரு வகையான மறைமுக ஆறுதலுக்கு வழி வகுக்கிறது.

“ஆய்பூ அரும்பின் அலர்கொண்டு உதுக்காண் எம்
கோதை புனைந்த வழி
உதுக்காண் சாஅய் மலர்காட்டி சால்பிலான் யாம் ஆடும்
பாவை கொண்டு ஓடியுழி
உதுக்காண் தையால் தேறு எனத் தேற்றி அறனில்லன்
பைய முயங்கி யுழி” (கலித்தொகை – 144)

இப்பாடலில், தலைவனைப் பிரிந்து கையற்றுக் கவலையுற்றத் தலைவியொருத்தி தலைவனொடு சென்று உறவாடிய இடங்களுக்கு மீண்டும் செல்கிறாள். இதுதானே தலைவன் அரும்பின் மலர் கொண்டு எனக்காக மாலை கட்டிய இடம். இதுதானே கோரைப் புல்லால் ஆன பொம்மையைக் கொண்டு ஓடி என்னைப் பின்தொடரச் செய்த இடம். இதுவன்றோ எனக்கவன் தோய்யில் பொறித்த இடம். இதுவன்றோ பிரியேன் எனத் தெளிவுரை கூறியென்னை அணைத்த இடம் எனச் சொல்லிப் புலம்புகிறாள். “ஒரு குறிப்பிட்ட உள்ளப்போராட்டம் மிக்க சூழலைச் சமாளிப்பதற்காக முன்னிருந்த நிலைக்குத் திரும்புதல் பின்னோக்கமாகும்” என்ற உளவியல் வரையறை இச்சூழ்நிலையோடு பொருந்துகிறது.

**திரிபுணர்ச்சி**

பிறழ்ந்த நடத்தைகளில் ஒன்றாக இருப்பது திரிபுணர்ச்சி ஆகும். இத்திரிபுணர்ச்சி கொண்டோர் தற்செயலாக இயல்பான நிகழ்ச்சிகளிலும் மறைபொருளையே காண்பர். ஒருவர் அவரைச் சாதாரணமாகப் பார்ப்பதை எச்சரிக்கும் முறைப்பாகவும் இயல்பாக நடைபெறும் இயற்கை நிகழ்வுகளைத் தன்னைப் பயமுறுத்துவதாகவும் எண்ணுவர்.

பருவ மாற்றத்தின் அடிப்படையில் கார்ப்பருவம் இயல்பாக வருகின்றது. இந்நிலையில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைத் தேற்றிய தோழியிடம், பாம்பகள் இறந்துபடுமாறு மிகுந்த வேகத்தோடு இடிக்கப்படும் இடியோசையும், புயற் காற்றோடு வரும் பெருமழையும் தலைவனைப் பிரிந்திருக்கும் என் மீது இரக்கம் காட்டாது துன்புறுத்துகின்றன என்கிறாள்.

"……………… ஆர்அளி இலையோ நீயே? பேர் இசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர், அளியர்இ பெண்டிர் இஃது
எவனோ? " (குறுந்தொகை – 158)

இயற்கை பருவமாற்றமாகிய கார்காலம் தன்னைத் துன்புறுத்தவே வந்தது என நினைப்பது தலைவியின் திரிபுணர்ச்சி நிலையேயாகும்.

**தன்முகத்திருப்பம்**

மனமுறிவைத் தவிர்க்கவும், தணிக்கவும் பிறரை உள்ளத்தாலும், உடலாலும் தாக்குதல் உண்டு. மாறாக அத்தாக்குதல் வேகத்தைத் தன்மீது திருப்பிக் கொள்ளுதல் ஒரு தற்காப்பு இயங்கு முறையாகும். "தாக்குதல் வகையைச் சார்ந்த உள்மன உந்துதல்கள் புறஉலக இலக்கினின்று பின்வாங்கித் தன்மீதே செலுத்துப்படுவதைத் தன்முகத்திருப்பம்" என உளவியலாளர்கள் வரையறை செய்கிறார்கள்.

பிரிந்துசென்ற தலைவன் குறித்த நேரத்தில் வருவான் என்னும் உறுதியான நம்பிக்கை, கார்காலம் காலமல்லாத காலத்து வந்ததாகத் தோன்றும் எண்ணம் ஆகிய இரண்டிடைப்பட்டத் தலைவி பிறபொருள் மேல் வெறுப்பினைக் காட்ட இயலாத நிலையில்,

"கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர ஒடியல் போல
அருள் இலேன் அம்ம அளியேன் யானே" (நற்றிணை – 289)

எனத் தன்னைத்தானே குறைகூறிக் கொள்கிறாள். ஆயர்கள் இரவில் கொளுத்திய வெட்டுண்ட வேர் மரக்கட்டை தானே எரிந்து தானே அவிதல் போலத் துன்பத்தீயில் தலைவி தவிக்கிறாள். அருளிலேன், அளியேன் என்னும் தொடர்களிலும் ஆதரவற்ற இரக்கத்திற்கு உரிய நிலையில் தன்னைத் தானே நிறுத்திப் பேசுகிறாள்.

"மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழிஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்தக் கோனை
யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்
கோடுஈர் இலங்கு வளைநெ கிழ்த்த
பீடுகெழு குரிசிலும், ஓர் ஆடுகள மகனே." (குறுந்தொகை – 31)

காணாமல்போன தனக்கேற்றவனாகக் கருதிய தலைவனைத் தேடி ஆடுகளங்களுக்கு நான் செல்கிறேன். இவ்வாறு ஆடுகளங்களில் திரிந்து கொண்டிருப்பதால் நானும் ஓர் ஆடுமகளாகிவிட்டேன். என் வளைநெகிழும்படி என்னை வருத்துகின்ற தலைவன் ஓர் ஆடுகளமகன். இப்பாடலில் அரசியாகிய தான் ஓர் ஆடுகளமகளாகத் திரிகிறேன் என்பது தன்முகத்திருப்பமாக அமைகிறது.

**நிறைவுரை**

சங்க இலக்கியமானது மானிடவாழ்வையும் வரலாற்றையும் இயம்புவதாக அமைகின்றது. உளவியல் என்பது மனிதனை ஆராயும் இயலாக அமைகின்றது. இவ்விரண்டிற்கும் மனித மனமே அடிப்படையாக உள்ளது. மனித எண்ணங்களையும், நடத்தைகளையும் அய்வதே உளவியல் எனப்படும். மனிதனின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும், அதற்கான

காரியங்களையும் கண்டு ஆராயும் ஓர் அறிவியல் துறையே உளவியலாகும். தலைவன் பொருள் காரணமாகவும், பரத்தையர் கூடும் பிரிதல் மூலம் அச்சம், கவலைப்படுவதால் தலைவி உள்ளப்போராட்டத்திற்கு ஆளாகின்றாள். மேலும், அன்புடைச் சற்றம் ஒருபுறம். நெஞ்சுறைக் காதலன் ஒருபுறம். இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் தலைவி உள்ளப்போராட்டத்தினால் தவிப்பதை அறிய முடிகிறது. தலைவன் பொருளின் தேவை நினைக்கின்றான். அதனால், தலைவியை விட்டு பிரிகிறான். அப்பிரிவை ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ள முறிவுக்கு ஆளாகுகின்றதை அறியமுடிகிறது. தலைவன் - தலைவியே விட்டுப் பிரியும் போதும், தோழி இரவுக்குறி – பகற்குறி மறுக்கும் போதும் தலைவனின் உள்ள முறிவு அல்லது உள்ளம் கவலைப்படுவதை உணர்த்துகிறது. தலைவி, பரத்தையரைக் குறை கூறும்போது பரத்தையர் உள்ளம் மனக்காயம் அடைந்துள்ளதாகச் சங்க அகப்பாடல்கள் வழி அறியமுடிகிறது. துன்புறுத்தும் நிகழ்ச்சிகளில் உணர்வின் ஈடுபாட்டைக் குறைத்துக் கொள்ளுதல், துன்ப சூழல்களைப் பின்னர் எண்ணும் மனம் ஆகிய எண்ணப் போக்குகள் சங்கத் தலைவியர் பாடலில் காணமுடிகிறது. மேலும் துன்பத்தில் இருக்கும் போது, பழைய இன்ப நிகழ்ச்சிகளை நினைத்து ஆறுதல் அடைதல், ஒருவர் இன்னொருவர்க்கு ஆறுதல் கூறும்போது பழைய நிகழ்வுகளை நினைத்துப் பார்த்தல் மூலம் பின்னோக்கம் உத்தியைக் காணமுடிகிறது. சுருங்கக்கூறின், உள்ள உணர்வின் படப்பிடிப்பே இலக்கியமாகும். உள்ள உணர்வைப் பற்றிய படிப்பு உளவியலாகும். எனவே இலக்கியமும், உளவியலும் தொடர்புடையன என்பதனை இவ்வாய்வின் மூலம் அறியலாம்

**துணைநூற்பட்டியல்**


இரவிச்சந்திரன் தி.கு (2015), சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீட்டகம், சென்னை

நலங்கிள்ளி. அரங்க (2020), சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு, பரிசில்

சிவராஜ்.து , (1994) சங்க இலக்கியத்தில் உளவியல், சிவம் பதிப்பகம், வேலூர்

மருதநாயகம்.ப, சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீயும் மேல அறிஞரும்

தமிழண்ணல், சங்க இலக்கியம் ஒப்பீடு, பாரி நிலையம், சென்னை

தமிழண்ணல், ஒப்பியல் அறிமுகம், பாரிநிலையம், சென்னை

கைலாசபதி . க, (1988) சமூகவியலும் இலக்கியமும், நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை

மாணிக்கனார். வ.சுப , (2009) தமிழ்க்காதல் , பாரிநிலையம், சென்னை.